இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 346 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 10 – புதன்கிழமை 26 ஜூலை 2023 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 346 : Thiruvalluvar Year - 2054 - Aadi 10 - Wednesday 26 July 2023 - Madurai 16 Pages ₹ 5.00


## இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழ்நாட்டு மீனவர்களை விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுக!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.7.2023) சென்னை, காமராஜர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் கக்கன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் "கக்கன்" திரைப்படத்தின் ஒலிநாடா மற்றும் முன்னோட்ட காட்சியை (Trailer) வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், ஜே.எம்.எச். அசன் மௌலானா, மருத்துவர் நா.எழிலன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி, காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் கோபண்ணா, கக்கன் அவர்களின் மகள் திருமதி கே.கஸ்தூரி பாய், பேத்தியும் சேலம் சரக காவல்துறை துணைத் தலைவருமான திருமதி எஸ்.ராஜேஸ்வரி, இசையமைப்பாளர் தேவா, தயாரிப்பாளர் ஜோசப் பேபி மற்றும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜூலை 26 -**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களை விடுவித்திடவும், அவர்களது படகினைத் திரும்ப ஒப்படைக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 மீனவர்கள் நேற்று முன்தினம் (24.7.2023) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில், அவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.7.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அதில், தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து சிறைபிடிக்கப்படும் சூழ்நிலையில், நீண்டகாலமாக நிலவிவரும் இப்பிரச்சினையைத் தீர்க்க தூதரக அளவிலான முயற்சிகளை முடுக்கிவிடுமாறு தான் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்ததாகவும், இருப்பினும் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவது குறித்து ஆழ்ந்த கவலையுடனும், ஏமாற்ற உணர்வுடனும் இந்தக் கடிதத்தை எழுதுவதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**இலங்கை அதிபர் சந்திப்பு!**

இந்தியாவிற்கு, இலங்கை அதிபர் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்கள் விவாதிக்க வலியுறுத்தி இருந்ததாகவும், மீனவர் பிரச்சினையில் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கும், இந்திய மற்றும் இலங்கை மீனவர்களின் உரிமைகள் மற்றும் வாழ்வாதாரங்களை மதிக்கும் வகையில், ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கும் இலங்கை அதிபருடனான சந்திப்பு வழிவகுக்கும் என தாம் நம்பியதாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**மீனவர்கள் மீது தாக்குதல் தொடர்கிறது!**

இந்தச் சூழ்நிலையில், இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையே உயர்மட்ட அளவிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும், தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படும், கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்வதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 மீனவர்களும், அவர்களது INDTN11MM837, INDTN11 MM257 பதிவு எண்கள் கொண்ட 2 விசைப்படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் நேற்று சிறை பிடிக்கப்பட்டுள்ளதை தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு, அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதால், அவர்கள் கடும் இன்னல்களைச் சந்தித்து வருவதாகவும், இந்தச் சம்பவங்கள் இருதரப்பு உறவுகளை சீர்குலைத்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கடுமையான சமூகபொருளாதார விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்றும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கவும், பறிமுதல் செய்யப்பட்ட அவர்களது படகுகளை பாதுகாப்பாக திரும்ப ஒப்படைக்கவும் கேட்டுக்கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திட, இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வு காண வேண்டிய அவசியத்தை மீண்டும் வலியுறுத்துவதாகவும், இது தொடர்பாக சாத்தியமான அனைத்து தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திருச்சியில், இன்று நடைபெறுகிறது!

# டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்!

## முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

**திருச்சி, ஜூலை 26 -**

**டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம் இன்று திருச்சியில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.**

இதுகுறித்து கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கடந்த 22.03.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல்" உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாக சரிபார்க்கப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு, மாநிலம் முழுக்க கழக மாவட்டங்களை ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, அதிலுள்ள ஒவ்வொரு மண்டல வாரியாக, வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) ஒரு நாள் பயிற்சி பாசறைக்கூட்டம் நடத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, டெல்டா மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்" இன்று (26-07-2023 - புதன்கிழமை) அன்று திருச்சி, ராம்ஜி நகர், கருமண்டபம் என்ற இடத்தில், முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.

டெல்டா மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 15 கழக மாவட்டங்களின், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**1.அரியலூர், 2.பெரம்பலூர், 3.கடலூர் கிழக்கு, 4.கடலூர் மேற்கு, 5.மயிலாடுதுறை, 6.நாகப்பட்டினம், 7.திருவாரூர், 8.தஞ்சாவூர் வடக்கு, 9.தஞ்சாவூர் மத்திய, 10.தஞ்சாவூர் தெற்கு, 11.திருச்சிராப்பள்ளி தெற்கு, 12.திருச்சிராப்பள்ளி மத்திய, 13.திருச்சிராப்பள்ளி வடக்கு, 14.புதுக்கோட்டை தெற்கு, 15.புதுக்கோட்டை வடக்கு**

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## இராமநாதபுரத்தில் ஆக.18 அன்று

# மீனவர் சங்கங்களின் மாநில மாநாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்!

சென்னை, ஜூலை 26 -

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவதையும், தாக்கப்படுவதையும் கண்டித்து இராமநாதபுரத்தில் ஆகஸ்ட் 18ஆம் தேதி நடைபெறவுள்ள மீனவர் சங்கங்களின் மாநில மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார் என்று மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியைச் சேர்ந்த 9 மீனவர்கள் நெடுந்தீவு பகுதியில் இலங்கை கடற்படையினரால் நேற்று (25.7.2023) கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**பிரதமருக்கு முதல்வர் கடிதம்!**

இதுகுறித்து முதலமைச்சர் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களுக்கும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொடர்ந்து கடிதம் மூலமாகவும், தொலைபேசி வாயிலாகவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வருகிறார். இருந்தபோதிலும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகிறது.

முதலமைச்சர் அவர்கள், கடந்த 20.7.2023 அன்று இந்திய பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், இந்தியாவிற்கு வருகை தந்த இலங்கை அதிபரிடம், இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாத்திடவும், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுவது குறித்தும், கைது செய்யப்படுவது குறித்தும், இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி அவர்களது உரிமைகள் மற்றும் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வது குறித்தும் இலங்கை அதிபரை வலியுறுத்திட கேட்டுக்கொண்டார்.

மேலும், ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களை தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பு கொண்டு, தமிழக மீனவர்கள் சந்தித்து வரும் பிரச்சினைகள் குறித்து இந்தியாவிற்கு வருகை தந்த இலங்கை அதிபரிடம் பேச வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், மீனவர்களின் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்நாட்டின் அனைத்து மீனவர் சங்கங்கள் ஒன்றிணைந்து, தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்படுவது, தாக்கப்படுவது, அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவது போன்ற நடவடிக்கைகளை கண்டித்தும், அதனை தடுத்திட கோரியும், மேலும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் இராமநாதபுரத்தில் ஆகஸ்ட் மாதம் 18ஆம் தேதி மாநில மாநாடு நடத்தவுள்ளது.

இம்மாநில மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் அழைப்பு விடுத்துள்ளனர். அவர்களின் அழைப்பினை ஏற்று முதலமைச்சர் அவர்கள் ஆகஸ்ட் 18ஆம் தேதி இராமநாதபுரத்தில் நடைபெறவுள்ள மீனவர் சங்கங்களின் மாநில மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு தெரிவித்துள்ளார் என்று மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.